ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2044/36 - 2017 නොවැම්බර් මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.11.09

*2044/36 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

*மதுவரி அறிவித்தல் இலக்கம் : 1002*

**எதனோல் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மீதான மதுவரி**

*மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயத்தின்) 22 ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தகளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இதனகத்திற்குப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மதுவரி அறவிடத்தக்க பொருட்கள் ஒவ்வொன்றின் மீதும், அதே அட்டவணையில் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு, 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் மதுவரி விதிக்கப்படுகிறது என இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, நவெம்பர் 09.*

**அட்டவணை**

| | *நிரல் I* | *நிரல் II* |
|---|---|---|
| | **மதுவரி அறவிடத்தக்க பொருட்கள்** | **மதுவரி ரூபா சதம்** |
| (i) | தென்னங் கள்ளு (தொகை லீற்றர் ஒன்றுக்கு) | 05.00 |
| (ii) | வெல்லப்பாகு (தொகை கி. கிராம் ஒன்றுக்கு) | 10.00 |
| (iii) | காய்ச்சி வடித்தல் மூலம் ஸ்பிரித்துக்களைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப் படும் அரிசிக் கூழ் (தொகை கி. கிராம் ஒன்றுக்கு) | 10.00 |
| (iv) | காய்ச்சி வடித்தல் மூலம் ஸ்பிரித்துக்களைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப் படும் மக்காச்சோளக் கூழ் (தொகை கி. கிராம் ஒன்றுக்கு) | 10.00 |
| (v) | காய்ச்சி வடித்தல் மூலம் ஸ்பிரித்துக்களைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப் படும் பழக் கூழ் (தொகை கி. கிராம் ஒன்றுக்கு) | 10.00 |

1A - PG 3749 — 557 (2017/11)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

வேறு அறிவித்தல்களிலுள்ள ஏற்பாடுகள் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், இக்கட்டளை மூலம் விதிக்கப்படுகின்ற மதுவரித் தீர்வையானது,

(அ) ஏதேனுமொரு மாதத்தின் முதல் பதினைந்து நாட்களுக்குள் காய்ச்சி வடிகட்டுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற தொகை மூலப்பொருட்கள் தொடர்பில் குறித்த மாதத்தின் இறுதித் தினத்திற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும் ; மற்றும்

(ஆ) குறித்த மாதத்தின் முதல் பதினைந்து நாட்களுக்குப் பின்னர் காய்ச்சி வடிகட்டுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற தொகை மூலப் பொருட்களுக்கான மதுவரித் தீர்வையானது, அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும், மேற்குறித்த அட்டவணையின் நிரல் II இல் விதிக்கப்பட்டுள்ள மதுவரியானது, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் செலுத்தப்படாதவிடத்து, குறித்த மதுவரித் தீர்வைக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு நூற்றுக்கு மூன்று சதவீதம் (3□) என்ற விகிதத்தில் மேலதிக அறவீடொன்றும் அறவிடப்படுதல் வேண்டும்.

*11-1107*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.